7—

கீழப்பாவூர் ஒன்றியம் இராமனூருக்கு பேருந்து வசதி

*20639—திரு. எஸ்.எஸ். ராமசுப்பு :

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம், கீழ்ப் பாவூர் ஒன்றியம், இராமனூர் கிராமத்திற்குப் பேருந்து வசதி இல்லாததை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், பேருந்து வசதி செய்தி கொடுக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம், கீழப்பாவூர் ஒன்றியத்தைச் சார்ந்த இராமனூர் என்ற சிறு கிராமம் சுமார் 100 வீடுகளைக் கொண்டதும் சுமார் 350 மக்கள் தொகை கொண்டதும் ஆகும். இக் கிராமத்தில் தற்போது பேருந்துகள் இயங்கி வருகின்றன. வீரகேரளம்புதூர்-வீராணம் பிரதான சாலையிலிருந்து பிரிந்து சுமார் 0.5 கி.மீ. தொலைவிலேயே அமைந்துள்ளதால், இது பேருந்து வசதி செய்யப்பெற்ற கிராமமாகக் கருதப்படுகிறது.

திரு. எஸ்.எஸ். ராமசுப்பு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லும்பொழுது இராமனூர் கிராமம், வீராணம் சாலைக்கு அருகில் இருக்கிறது என்று சொன்னார்கள். இராமனூருக்கு அருகிலே கலிங்கப் பட்டி என்ற கிராமமும், அதைப்போல சுற்று வட்டாரத்தில் 2 கிராமங்களும் இருக்கின்றன. அந்தப் பகுதியினுடைய சாலை இப்பொழுது பராமரிக்கப்பட்டுள்ளது. ஆதலால், பஸ்ஸே விடப்படாத கிராமம் என்று சொல்லக்கூடிய பல்வேறு கிராமங் களுக்கு பஸ் வசதி செய்து கொடுக்க அமைச்சர் அவர்கள் முன் வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 350 மக்கள் தொகை கொண்ட கிராமம், செல்லுகின்ற வழியிலே இருந்து பிற்பகுதியாக சென்று திரும்பி வரவேண்டிய சூழ்நிலை இருக்கிறது. ஆகையால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிக்கை வைக்கின்றபொழுது 0.5 கி.மீ. அல்லது 1 கி.மீ. தொலைவில் இருக்கிற மெயின் சாலையிலிருந்து அந்தக் கிராமம் பிற்பட்டு இருக்கின்ற கிராமமாக இருப்பதால்,

சென்று திரும்பி வர முடியாத சூழ்நிலை இருக்கின்ற காரணத்தாலே, அது பேருந்து வசதி பெற்ற கிராமமாக நாங்கள் கருதிக்கொண்டு இருக்கின்றோம். மாண்புமிகு உறுப்பினரின் கோரிக்கையை அரசு பரிசீலிக்கும்.

முற்பகல் 10-25

திரு. எஸ்.எஸ் ராமசுப்பு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் சுறுசுறுப்பாக இயங்கக்கூடிய அமைச்சர். எங்களுடைய திருநெல்வேலி மாவட்டத்தில் கட்டபொம்மன் போக்குவரத்துக் கழகத்தினுடைய பஸ்களுடைய நிலைமை ஏழு ஆண்டுகளாக புதிய பஸ்கள் விடப்படாததால் இன்றைக்கு மிகவும் மோசமாக இருக்கிறது. அந்தப் பகுதி மக்கள் அந்த பஸ்களில் ஏறிச்செல்லும்போது பல இடங்களில் பிரேக் டவுன் ஆகிவிடுகின்றன. இதனால் மக்கள் பெரிதும் அல்லலுக்கு உள்ளாகியிருக்கிறார்கள். ஏற்கனவே 100 பஸ்கள் புதியதாக விடுவதாக அமைச்சர் அவர்கள் சொல்லி இருந்தார்கள். ஆனால் இன்னும் அந்த பஸ்கள் விடப்படவில்லை. அவை எப்போது விடப்படும்? விரைவாக இந்தப் பழைய பஸ்களை எல்லாம் எடுத்துவிட்டு புதிதாக கட்டபொம்மன் போக்குவரத்துக் கழகத்தில் பஸ்களை விடுவதற்கு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கட்டபொம்மன் போக்குவரத்துக் கழகம் பிரிக்கப்பட்டதற்குப் பிறகு அந்தப் போக்குவரத்துக் கழகத்தில் இயக்கப்படுகிற மொத்த பேருந்துகளின் எண்ணிக்கை 832. இதில் நகரப் பேருந்துகள் 320. புறநகர்ப் பேருந்துகள் 406, மலைச்சாலைப் பேருந்துகள் 32. இங்கு ஸ்பேர் பஸ்கள் 74 வைத்துக்கொண்டிருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சில பேருந்துகள் பழுதடைந்து இருக்கின்றன என்று குறிப்பிட்டுக் காட்டியிருக்கிறார்கள். அதற்காகத்தான் மாண்புமிகு இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் அந்தப் போக்குவரத்துக் கழகத்திற்கு 4 கோடி ரூபாய் நிதி உடனடியாக ஒதுக்கி அந்தப் போக்குவரத்துக் கழகத்திலே இருக்கிற பழைய பேருந்துகள் அத்தனையையும் மாற்றியமைப்பதற்காக அரசு நடவடிக்கை மேற்கொண்டிருக்கிறது. இரண்டு மாத கால அளவில் அத்தனையும் மாற்றியமைக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 8. திரு. ஏ.கே. சி. சுந்தரவேல், மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர்.